www.tamilarangam.net

மலர் 2 இதழ் 11 3 — 11 — '85

பொதுமை

# போர்நிறுத்தம் பேணப்படுமா?

போர்நிறுத்தம் என்பது தாக்குதல்களைத் தற்காலிகமாக நிறுத்திக்கொள்வது மட்டுமல்ல, அடுத்த பெருந் தாக்குதலுக்கான தயாரிப்புகளில் ஈடுபடாமல் இருப்பதும் தான் என ஒரு பிரபல அரசியல் விமர்சகர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை—இந்திய அரசு தலைவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சந்திப்பை அடுத்து ஈழப்போராட்டம் ஒரு புதிய பரிணாமத்தை எட்டியது. ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலம் ஈழத்தை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு சர்வதேச அரசியல் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்த திம்புப் பேச்சுக்கள்வரை தொடர்ந்து நீடித்து ஈழப்போராட்டத்தில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தியிருப்பது வெளிப்படையானது.

இலங்கை அரசுடனான போர் நிறுத்த உடன்பாட்டில் முன்னர் தெரிவிக்கப்பட்ட 48 வாரகால அவகாசம் செப்டம்பர் 17 உடன் முடிவடைந்தபோது, இலங்கை அரசு ஒருதலைப் பட்சமாகத் தான் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை பேணப் போவதாகப் பீற்றிக் கொண்டது. ஆனால் ஈழத்தின் தென் பிராந்தியங்களான மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை - ஏன், வன்னிப் பிராந்தியத்திலும்கூட இராணுவ முற்றுகையும் ஆயுதப்படையினரின் அட்டகாசமான ரோந்துகளும் தொடர்ந்தும் இடம்பெற்றே வந்துள்ளன. மேலும் ஹெலிகாப்டர்கள் மற்றும் விமானங்கள் மூலம் தொடர்ச்சியான கண்காணிப்புகள் தொடர்ந்து வருகின்றன. அப்பாவிகளான இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டு வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். போராளிகளின் மறைவிடங்களும் முகாம்களும் தேடிச்சென்று அழிக்கப்படுகின்றன. போராளிகள் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு தொடர்ந்தும் கொல்லப்பட்டே வருகின்றனர். அரசு தானே அறிவித்த ஒரு தலைப்பட்சமான போர் ஓய்வின் இலட்சணம் இவ்வாறிருக்கிறது. தனது வார்த்தைகளை நிறைவேற்ற முடியாமல் அரசு திண்டாடுகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து ரொடீசியா தனது விடுதலைக்காகப் போராடியபோது அங்கு கடமையிலிருந்த ஆறு விமானிகள் தற்போது இரத்மலானையில் உள்ளனர். இவர்களுக்குச் சம்பளமாக மாதம் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. விசேடப் பயிற்சி விமானங்கள் இரண்டு வழங்கப்படவுள்ளது. இதுமட்டுமன்றி இஸ்ரேலிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை இலங்கை கொள்வனவு செய்திருப்பதாகவும் இந்த வகை ஆயுதங்களில் பதினைந்து தொன் நிறையுள்ள குண்டுகளும் ஏராளமான சிறிய ரகப் பீரங்கிகளும் அடங்கியுள்ளன என்றும் சொல்லப்படுகிறது. தென்னாபிரிக்க ரக கவச வண்டிகள் பல அண்மையில் விலைக்கு வாங்கப்பட்டிருப்பதாகவும் 'போர்வாட்' (FORWARD) பத்திரிகை கூறியுள்ளது. அரசியல் வட்டாரங்களில் பலமாக இந்தச் செய்திகள் அடிபட்டபோதும் இலங்கை அரசு இதுகுறித்து மௌனம் சாதித்து வருகிறது.

இதே வேளை பாதுகாப்புச் செலவினங்களுக்காக 83 கோடியே 33 இலட்சத்து 78 ஆயிரம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேசியத் துணைப்படை என்ற பெயரில் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவச் சேவை அளிக்கப்படவுள்ளது. இந்தக் கட்டாயச் சேவையிலும் கூட வடக்கு - கிழக்கில் - வசிப்போர் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என அமைச்சர் ஆனந்ததிஸ்ச டி அல்விஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கட்டாய இராணுவ சேவைக்கு ஆட் சேர்ப்பு:
சேர மறுத்தால் நான்கு வருட சிறைவைப்பு
● ரனில் விக்கிரம சிங்க

வடக்கு, கிழக்கு காடுகளில் போர்ப் பயிற்சி
பெற 400 பொலீசார் புதிதாக சேர்க்கப்படுவர்
● தி. ஐலண்ட் தகவல்

இரத்மலானையில் ஆறு றொடீசிய விமானிகள்
● சபையில் லக்ஷ்மன் ஜெயகொடி

தென்னாபிரிக்காவிலிருந்து ஆயுதங்கள்
வாங்கப் பட்டதா?
● சபையில் சரத் முத்தட்டுவேகம கேள்வி

பாதுகாப்புப் படையினரால் தமிழர்
மத்தியில் அச்ச உணர்வு
● பிரதமர் ராஜீவ் கவலை

இவ்வாறாகத் தமிழ் பேசும் மக்களை பூண்டோடு ஒழிக்க கங்கணம் கட்டியபடியே அரசு பேச்சு வார்த்தை மூலம் சமாதானத் தீர்வு என கபட நாடகம் ஆடிவருகிறது. தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்தத் திட்டமிட்ட இழுத்தடிப்புகளில் அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

## வளர்த்த கடாவே மார்பில் பாயும்:

வளர்த்த கடாவே மார்பில் பாயும் என்பது தமிழ் பேசும் மக்களிடையே நிலவும் ஒருபழமொழி. அரசியல் ரீதியாக தங்கள் பதவிப் போட்டிக்காக இனவாதத்தைத் தூபமிட்டு வளர்த்தவர்கள் இன்று அதன் விளைவுகளை அனுபவிக்கின்றனர். இதேபோல் பல விடயங்களில் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காகிப் போன கதைகளால் அரசியல் அவஸ்தைப்படும் தலைவர்கள் உலகில் பலர். 71 ஆம் ஆண்டில் எந்த இராணுவப் பயிற்சியும் இல்லாத பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர் அரசுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டதனை அரசியல் உலகில் எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இதன் தாற்பரியத்தைப் புரிந்தோ புரியாமலோ இன்றைய ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு எதிரான புனிதப் போரில் ஈடுபடுத்தப் பரவலான இராணுவப்பயிற்சி வழங்கி வருகின்றனர். சமூக—பொருளாதார நிலைமைகள் இறுக்கம் காணும் போது இதே துப்பாக்கிகள் இன்றைய ஆட்சியினருக்கு எதிராகவும் திரும்பும்என்பதனையும் அண்மைய பல சம்பவங்கள் குறியிடுகின்றன. முல்கிரிகல இடைத் தேர்தலின் உள்ளும், புறமும் பல முக்கிய தலைவர்கள் ஆற்றிய பல்வேறு உரைகள் இலங்கையின் அச்சத்தை வெளிச்சம்போட்டுக் காட்டின. இலங்கை அரசின் இந்த அச்சம் ஜே. ஆர்.—ராஜீவ் சந்திப்பை அடுத்து தற்காலிகமாக வேனும் நீங்கியுள்ளது என்றே தற்போதைய அரசியல் சூழலில் மதிப்பிடமுடியும்.

இதேவேளை தற்போதைய இலங்கையின் ஐக்கியப்பட்ட அரசியல் அமைப்பு வரையறைக்குள் தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளைப் பூரணப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் இலங்கை எவ்வளவு தூரம் ஒத்துழைக்கும் என்பது இந்தியாவின் பெருங்கவலையாக இருக்க முடியும் எனினும், இலங்கை மேற்கொள்ளும் இழுத்தடிப்புகளும் வீண் காலவிரயங்களும், படைபலத்தைப் பெருக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் இனப்பிரச்சனைக்கு விரைவான ஒரு தீர்வைக் காண்பதில் ஏற்படுத்தும் முட்டுக் கட்டைகளை இந்தியா நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்பதே ஈழவரின் கவலையாகும். அத்துடன் பாதுகாப்புப்படை மீது தமிழ்பேசும் மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையையும் அச்ச உணர்வுகளையும் இந்தப்படைகளை நம்பி சமாதானத் தீர்வொன்றுக்கு மக்கள் இணங்க மாட்டார்கள் என்பதையும் இந்தியப் பிரதமர் புரிந்துள்ளார் என எண்ணமுடியும்.

## இந்தியாவின் சங்கடம்:

அயல் நாடுகளுடனான இந்தியாவின் புதிய ராஜதந்திரப் போக்குகளில் ராஜீவின் தலைமைத்துவத்திற்கு ஏற்பட்டுள்ள பலப் பரீட்சைகளில் இலங்கைப் பிரச்சனையும் ஒன்றாகும். காலப்போக்கில் பிரிவினைக்கு வழிவகுக்கக் கூடியதான அரசியற் தீர்வொன்றுக்கு இந்தியா வலியுறுத்தும் என்ற அச்சத்தை இலங்கை கொண்டிருந்தது. நாடாளுமன்றத்தின் போது வாக்குச் சாவடியில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகமும், லங்கா மாணவர் சம்மேளனம் அரசுக்கு எழுதிய கடிதமும் இதற்கு எடுத்துக் காட்டாகும். விசாரணைகள் இன்றிச் சிறையிலுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரிய மாணவர் சம்மேளனம் நீதிக்காகப் போராடும் தமிழர்களின் போராட்டத்தைப் பூரணமாக ஆதரிக்கின்றது எனவும் அறிவித்துள்ளமை கூர்ந்து நோக்கப்படவேண்டியது.

ஆக முடிவாகப் பார்க்குமிடத்து போர் நிறுத்தம் உண்மையில் முழுமையான முறையில் பேணப் படுகிறதா? அல்லது எதிர்காலத்தில்தானும் உறுதியாகப் பேணப் படமுடியுமா? என்பது கேள்விக் குறியாகும். இலங்கையில் தொடரும் இனப்படுகொலைகளைத் தடுத்துநிறுத்த - தற்காலிகமாகவேனும் அமைதியான சில தற்காப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது தவிர்க்கமுடியாததாகிறது. இல்லையெனில் திருமலை, மட்டக் களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் பகுதிகளில் பெருகிவரும் அகதிகள் தொகையினைக் கட்டுப்படுத்த முடியாதவராகிவிடுவோம். தொடரும் இனப்படுகொலைகளை சர்வதேச மன்னிப்புச் சபைகூடச் சுட்டிக்காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது.

எனினும் ஸ்ரீலங்கா இராணுவம் போர்நிறுத்தத்தை மீறுத வரையில் ஈழத் தேசிய விடுதலை முன்னணியும் போர் நிறுத்தத்தை மீறுது என்று ஈழப்புரட்சி அமைப்பைச் சேர்ந்த தோழர் பாலகுமாரன் கூறியுள்ளார். இடைக் காலப் போர்நிறுத்தப்பற்றி ஈழத் தேசிய விடுதலை முன்னணி தெரிவித்த நிபந்தனைகளை ஸ்ரீலங்கா இராணுவம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால் மட்டுமே போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது அர்த்தமுடையதாகும்.

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்பை ஈர்க்க வல்லவையாக..

ஏர் அதன் ஒட்டங்கள்
இல்லை என்றால்- நெல்லின்
வேர் அதன். ஒட்டங்கள்
இல்லையென்றால்
கார் அதன் ஒட்டங்கள்
தானேது?— கோயில்
தேர் அதன் ஒட்டங்கள்
தானேது?

ஏர் மண்ணைக் கிழித்து ஓடவில்லை யென்றால், நெல்லின் வேர்கள் மண்ணில் ஊடுருவிப்பாய வில்லையானால் நாகரீகச் சின்னங்களான கார் மட்டுமன்றி கடவுளின் வாகனங்கள் கூட ஓடிச் செல்வது சாத்தியமற்ற தொன்றாகிப் போகும் என்பதை ஒரு கவிஞனின் மேற்படி வரிகளில் தெளிவாகியுள்ளன.

ஆம், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படவில்லையானால் வாழ்க்கை எப்படிப் போகும் என்பது கற்பனை பண்ணக் கூட முடியாத ஒன்று. விவசாயம், கைத்தொழில் துறைகளில் உற்பத்தியைப் பெருக்குவதும்—அதுவும் எமது மண்ணில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உற்பத்திகள் பெருக்கப்படுவது இன்றைய காலத்தின் ஒரு கட்டாயத் தேவையாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அண்ணல் காந்தி கதராடை உற்பத்தியைப் பெருக்க தாமே நூல்நூற்றார் என்பதை சரித்திரத்தின் பக்கங்களில் காணமுடியும். அண்ணல் காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை முற்றாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும்கூட தேசிய உணர்ச்சியைத் தூண்ட, அந்நியத்துணியைப்பகிஷ்கரித்ததையும், கதராடைப் பாவனையை ஊக்குவித்ததையும் நாம் புரிந்து கொண்டாக வேண்டும். தேசிய உணர்வின் எழுச்சியின் சின்னமாக கதராடைப்பாவனை வளர்ந்தது கண்கூடு. அந்நியர் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்த அந்நியத் துணிகள் எரிக்கப்பட்டன. ஆடம்பரப் பொருட்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. நாட்டின் ஒவ்வொரு சாதாரணக் குடிமகனும் கூட சுதந்திரப் போராட்டத்தில் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தவும்-தமது கோபத்தை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாகவும் இத்தகைய ஒரு போராட்ட வடிவத்தை காந்தி நெறிப்படுத்தினர். இதுபோன்ற வெகுசனப் போராட்டங்கள் சாதாரணக் குடிமக்களின் நாளாந்த வாழ்வில் சம்பந்தப்பட்டதாக மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பை ஈர்க்கவல்லவையாக இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இதை விடுத்து வெறுமனே கோவில் வாசல்களில் உண்ணாவிரதம் இருப்பதனையும் ஆர்ப்பாட்டமாய் கோஷித்து ஊர்வலமாய் போவதுடனும் மட்டும் வெகுசனப் போராட்டங்களை மட்டுப்படுத்துவது மீண்டும் மிதவாத அரசியற் சகதிக்குள் மக்களை சிக்கவைக்கவே பயன்படும் எனலாம். அதுவும் மக்களிடமிருந்து ஆயுதங்கள் அந்நியப்பட்டுப் போகாமல் பாதுகாப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளும் சிலர் தாமே மக்களுக்கும் ஆயுதங்களுக்கும் பாலமாகப் பயன்படுவதாக எண்ணிக்கொண்டு எடுக்கும் ஊர்வலமும் உண்ணா நோன்பும் சுய விளம்பரத்துக்கு மட்டுமே பயன்பட்டுப் போகும்.

போராளிகள் எனப்படுவோர் வெறுமனே ஆயுதங்களைக் கையாளும் கலையில் மாத்திரம் தேர்ச்சி பெற்றிருத்தல் போதாது. அவர்கள் உற்பத்தித் துறையிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மக்களை நெறிப்படுத்தும் அரசியல் முதிர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்க வேண்டியது மிக முக்கியமானதாகும். இதுபற்றி வியட்னாமிய வீரப்புதல்வன் ஹோசிமின் ஓரிடத்தில் குறிப்பிடுகையில் போர்க்களத்தில் மட்டும் வீரர்களாய் இருத்தல் போதாது உற்பத்தித் துறையிலும் வீரர்களாய் விளங்க வேண்டியது மிக முக்கியமானதாகும் என்றார். போராளிகள் என்றால் வெறுமனே கருவிகளைக் கையாளும் நிபுணர்கள் என்றிருப்பின் எமக்கும் அரச இராணுவத்திற்கும் இடையில் வித்தியாசம் இருக்கமுடியாது. அரசாங்கத்தின் கூலிப்பட்டாளங்கள்தான் எந்த வகையான உற்பத்திகளையும் மேற்கொள்ளாத சோற்றுப் பிண்டங்களாக பவனிவரமுடியும்.

மக்களுக்காக—மக்களின் மேன்மைக்காக ஆயுதம் தரித்த நாம் மக்களுக்குச் சுமையாக மாறிவிடக்கூடாது. நமது அன்றாடத் தேவைகளையும் அன்றாடச் செலவீனங்களையும் கவனிக்க மக்களின் பணத்தைப் பயன்படுத்துவதையிட்டு மிகவிழிப்பாக இருக்க வேண்டும். சிக்கனம்—எளிமை—பொறுமை என்பனவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் போராளிகளின் கூட்டுறவும், கூட்டுச் செயற்பாடுகளும்தான் ஈழத்தை நிதர்சனமாக்கும் என்பது வெளிப்படை.

எமது மண்ணில் இலகுவாகக் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி எமது மக்களின் அன்றாடத் தேவைகளுக்கென பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் நாம் கவனம்செலுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக வெளிமாவட்டங்களில் இருந்து பெறப்படும் நுகர் பண்டங்களுக்குப் பதிலாக எமது தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல் வேண்டும்.

## யாவரும் கேளிரென...

### ஆசிரியரவைக்கு வந்தமடல்

## போராளிகளும் - வைத்தியசாலையும்

அன்புடையீர்,

விடுதலைப் பாதையில் முன் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் விடுதலைக் காகப்போராடுகின்ற இயக்கங்கள் விடும் தவறுகளை எப்படி விமர்சிப்பது என்று தடுமாறியவர்களில் நானும் ஒருவன். கடந்த காலங்களில் பொதுமையில் வெளிவந்த மடல்களை படிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததால், எனக்கும் 'பொதுமை' ஆசிரியரவைக்கு, ஒரு மடல் வரைய வேண்டும் போல ஆவல் தோன்றியது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் வேலை செய்பவனாகிய நான் வைத்தியசாலையில் சில விடுதலைப் போராளிகளும், சம்பந்தப்பட்ட இயக்கங்களும் நடந்து கொள்ளும் முறையையிட்டு மனம் வேதனைப்படுவதோடு மக்கள் இத்தகைய சக்திகளை இனம்காணவும் இனிமேலாயினும் இப்படி நடவாது தடுக்கவும் இம் மடலைப் பிரசுரிக்கும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

புரட்டாதி மாதம் முதற்கிழமையில் (07-09-85, 10-30 A.M) ஆண்கள் சத்திரசிகிச்சைப் பகுதிக்கு போராளிகள் என்ற போர்வையில் வந்தவர்கள் தங்களுடன் கொண்டுவந்த கைக்குண்டை நோயாளியின் கட்டிலருகே விட்டுச் சென்றுள்ளார்கள். இதைக் கண்ட நோயாளிகளும், வேலை செய்பவர்களும் எப்ப வெடிக்குமோ, என்ன நடக்குமோ என பதட்டப்பட்டதற்கும், ஏக்கப்பட்டதற்கும் அளவேயில்லை. ஒருமணி நேரத்தின் பின் வந்து கைக்குண்டை அவர்கள் எடுத்துச் சென்றதன் பின்தான் பதட்டம் நீங்கியது. நோயாளியைப் பார்க்க வருபவர்கள் கைக்குண்டுகளுடன் தான் வைத்தியசாலைக்குள் வர வேண்டுமா?

இதேபோல் 11-09-85 நடு இரவில் ஆண்கள் சத்திரசிகிச்சைப் பகுதியின் வெளிப்புறத்தில் போராளிகள் என்ற போர்வையில் கைக் குண்டுகளுடன் சிலர் நின்று கொண்டு நோயாளியைப் பார்க்க வந்தவர்களோடு பிரச்சனைப்படுவதைக் காண முடிந்தது. அகால நேரத்தில் அநாவசியமாகக் கைக் குண்டுகளுடன் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டியது அவசியம் தானா?

இதனைவிட போராளிகள் என்ற போர்வையில், வைத்தியர்களும், தாதிமார்களும் வேலை செய்யும் நேரத்தில் நோயாளிகளைப் பார்க்க வந்து வேலைசெய்வோருக்கு இடையூறு விளைவிப்பதும், இதேபோல் பெண்கள் சிகிச்சைப் பிரிவில் வந்து கதைத்தவண்ணம் இருப்பதும், வேலை செய்வோர் சொல்லியும் கேட்காமல் நிற்பதும் வைத்தியசாலை நலன் கருதியும் ஒழுங்கு முறை கருதியும் தவிர்க்கப்பட வேண்டியவையே. இதை விடச் சில சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் வந்து தங்களையும் போராளிகள் என்று அறிமுகப்படுத்துவதால், யார் போராளிகள் என்று கண்டு கொள்வது கடினமானதாகிறது. மேலும் கடந்த காலங்களில் வைத்தியசாலையின் உள்ளும் புறமும் வாகனங்கள் கடத்தப்பட்டதனைப் பட்டியலில் காணலாம்.

இவ்வளவும் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட பெரிய இயக்கங்கள் எல்லாம் இவற்றைத் தெரிந்தும் மௌனமாகிவிட்டன.

இந்த நிலையில் நோயாளிகளும், நோயாளியைக் கூட்டி வருபவர்களும் கூட வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் இடையூறு இல்லாமல் நடந்து கொண்டால்தான் நோயை இலகுவில் குணமாக்க முடியும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வது நல்லது.

சேவை நோக்கம் கொண்ட தாபனங்களை உண்மையில் விடுதலைக்குப் போராடும் நல்ல இயக்கங்கள் சீர்குலைக்காது என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருந்தாலும், எல்லாப் போராளிகளும் தூய்மையை-நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே எமது அவா.

—விடுதலையை விரும்பும் ஒரு யாழ் வைத்தியசாலையின் ஊழியன்.

| வாகன இலக்கம் | இனம் | கடத்தப்பட்ட திகதி | சம்பவம் நடந்த இடம் |
|---|---|---|---|
| 34 சிறீ 3131 | வாக்ஸ்வகன் வான் (Volks wagon Van) | 14-11-84 | சுகாதார அதிகாரி அலுவலகம்கே.கே.எஸ் |
| 31 சிறீ 3789 | மிட்சுபிசி ஜீப் | 5-12-84 | ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை |
| 8 சிறீ 1426 | பியட் கார் | 15-1-85 | பிறவுண் வீதி யாழ்ப்பாணம் |
| 31 சிறீ 3795 | மிட்சுபிசி ஜீப் | 5-2-85 | வைத்தியசாலை யாழ்ப்பாணம் |
| 6 சிறீ 7009 | றெனோல்ட் வான் | 15-2-85 | வைத்தியசாலை யாழ்ப்பாணம் |
| 27 சிறீ 2057 | இசுசூ லொறி | 27-2-85 | மீசாலை |
| 8 சிறீ 4826 | மிட்சுபிசி ஜீப் | 6-3-85 | வைத்தியசாலை யாழ்ப்பாணம் |
| 2 [illegible] | [illegible] | 20-9-85 | இயக்கச்சி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இன்னுயிர் ஈந்தும்

புரட்சி இங்கே வளர்கிறது. இழப்பும் எம்மைத் தொடர்கிறது. ஈரோஸ் கடந்த 2-10-85 அன்று தனது தோழன் ''சின்னத்தம்பி மகேந்திரனை'' இழந்து விட்டிருக்கிறது. மட்டுநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழன் 'மகே' எல்லோராலும் 'தம்பி' என்றே அழைக்கப்படுவான். வரலாற்று வழிவந்த பல அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்த 'மகே' 1981ல் ஈரோசுடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்ட ஒரு போராளியானன். விடுதலைப் போராட்டத்தின் பரந்த தன்மையை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்ட தோழன் 'மகே' தன் திறமைகளாலும், அன்பாலும், அர்ப்பணிப்பாலும், நடைமுறையாலும் ஏனைய தோழர்களை இனிதே கவர்ந்திருந்தான்.

என்றும் ஈரோசின் கொள்கை நடைமுறையே எம்மவருக்கு விடிவுதரும் என்பதை ஆணித்தரமாகக் கூறுமிவன், ஈரோசின் கருத்தை நடைமுறைப்படுத்த ஒருபோதும் தயங்கியதில்லை. ஒரு இனிய தோழனை இழந்த சோகத்தோடு அவன் விட்டுச் சென்ற இடைவெளியை நிரப்ப—எமது மக்களுக்கான விடியலை நோக்கி எமது பாதங்களை உறுதியுடன் முன்வைப்போம்.

> தோழமை என்பது உன் தோள்மேல் இருந்ததால் உன் நினைவுகளை எங்கள் இதயம் சுருதியாய் மீட்டும். எமது மக்கள் விடிவினிலே உன் நினைவுகள் என்றும் எதிரொலிக்கும்.

13-9-85 அன்று ஈரோஸ் தனது தோழன் 'ஆனந்தனை' இழந்திருக்கிறது. தோழர் ஆனந்தன் மூதூரில் உள்ள மூன்ரும் கொல்னியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அண்மையில் மூதூர்ப்பகுதியில் பாதுகாப்புப் படையினரினுலும், சிங்களக் குண்டர்களினுலும் தாக்கப்பட்ட மூன்ரும் கொலனி, கங்குவேலி, மேன்காமம் மக்களை இரவோடிரவாக பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகித்தவர். தன்னுயிரையும்விட தான் நேசித்த மக்களே, மக்களின் நலனே பெரிதென மதித்த தோழர் ஆனந்தன் எம்மவர் மத்தியில் உடலோடு நடமாடாவிட்டாலும் உள்ளங்களோடு நடமாடிக்கொண்டிருக்கிருர்.

ஈரோசின் கொள்கையில் அசையாத நம்பிக்கையும் ஆணித்தரமான பிடிப்பும் கொண்டு தோழர்களுக்கும் தன் வாழ்வை ஒரு பாடமாக்கிக் காட்டிய தோழர் 'ஆனந்தன்' நம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவன் நினைவுகள் ஞாபகமாக தோழர்களை உருவாக்கட்டும்.

### கவனத்திற்கு

ஈரோஸ் அமைப்பானது தனிமனிதத் தலைமைத்துவத்தை நிராகரித்து, ஜனநாயக அடிப்படையிலான கூட்டுத் தலைமையை வலியுறுத்திவரும் ஒன்ருகும். அந்த வகையில் கொள்கை ரீதியான முடிவுகளை மேற்கொள்ளும் அதியுயர் பீடமான புரட்சிகர நிறைவேற்றுக் குழுவில் தோழர் பாலகுமார் அங்கம் வகித்து வருகின்ருர். அமைப்பின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக விருக்கின்ருர். ஆனல் சில பத்திரிகைகள் தோழர் பாலகுமார் அவர்களை வெறுமனே பேச்சாளர் என்றும் சில பத்திரிகைகள் அவரது தனித்தலைமையே ஈரோசை வழிநடத்துகின்றது என்றும் கூறிவருகின்றன. இது தவருகும்.

## சொன்னதும்... நடந்ததும்

□ கடந்த அக்டோபர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று வல்வெட்டித்துறை இராணுவ முகாமைத் தாக்குவதற்காகப் பயங்கரவாதிகள் சாதாரண வாகனங்களில் வந்தனர் என்றும், அவர்களை எதுவித இழப்பும் இன்றி வெற்றியுடன் முறியடித்து விட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்காபுவத் செய்தி வெளியிட்டது.

□ தொண்டமானுறு முகாமில் இருந்த இராணுவத்தினர் சிவில் உடையில் வந்து, ஒரு வானை மறித்து விசாரணைக்காக இளைஞர்களை எடுத்துச் செல்லும் வேளை ஒரு இளைஞர் தப்பி ஓட முயற்சித்தார் என்றும் அவரைத் துரத்தி இராணுவத்தினர் சென்றனர் என்றும், வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அண்மையில் சென்றுவிட்டதனுல் அந்த இராணுவ முகாம் காவலாளிகள் சிவில் உடையில் வருபவர்களை நோக்கிச் சுட்டனர் என்றும் அவர்களும் திருப்பிச் சுட்டனர் என்றும் இச் சம்பவம் நடக்கும்வேளை கடற்படையினரும், ஹெலிகொப்டர் ரோந்துப்படையினரும் சுட்டனர் என்றும் அறியப்பட்டுள்ளது. இச் சம்பவத்தின் போது பாதுகாப்புப் படையினர் பலருக்குக் காயம் ஏற்பட்டும், சிலர் இறந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

□ பொத்துவில் பொலிஸ் நிலையம் 30-9-85 திங்கட்கிழமை அன்று தாக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பொலிசார் காயமடைந்ததாகவும், பொலிஸ் நிலையத்தின் 40 யார் தொலைவில் இருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும், பல மணிநேரமாகத் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்ந்து இடம் பெற்றதாகவும், பின்னர் அவர்கள் வள்ளங்களில் தப்பிச்சென்று விட்டதாகவும் லங்காப்புவத் செய்தி வெளியிட்டது.

□ பொத்துவில் பொலிஸ் நிலையத்தின் காவலாளி தனது நிலை தடுமாறி மரநிழலின் அசைவை நோக்கிச் சுட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அனைத்துக் காவலாளிகளும் சுட ஆரம்பித்தனர் என்றும் இறுதியில் எதுவிதக் காரணமும் கிடைக்காததினுல் தடுப்புக் காவலில் இருந்த இரண்டு முஸ்லீம் பிரஜைகள் சுட்டுக் கொல்லப்பட்டு வெளியில் போடப்பட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து செய்தி கிடைத்துள்ளது.

## ஒரு தாயின் கண்ணீர்

நான் இரு மைந்தரைப் பெற்றேன். அவர்களுக்குக் கல்வியூட்டி வளர்த்தேன். 77 களில் பல்கலைக் கழகம் புகமுடியாது ஒருத்தன் கொழும்பு நோக்கிச் சென்ருன். மற்றவன் என்னேடு வாழ்ந்தான். நான் சத்தியமாகச் சொல்கின்றேன், அவர்களைப் பாரமாகக் கருதவுமில்லை ஈழம் பெற்றுத்தா என்று கேட்கவுமில்லை. ஓர் இரவு... இளையவன் பொன்னலைக் கடற்கரை நோக்கிச் சென்ருன். பத்தடி உயர மேடையை உயர்ந்துபார்த்தானே என்னவோ? என்னிடம் வந்து... அம்மா மலர்ந்தது ஈழம் என்ருன். ஈழ கீதத்தைப் பாடினன். சிங்களவரின் செங்குருதியில் ஈழத்தை வென்றெடுப்போம் என்று கூறினன். நான் திடுக்கிட்டு விட்டேன். ஏன் மகனே உனக்குள் இந்த மாற்றம்? தத்துவம் பேசிவிட்டு அன்றுடன் என்னை விட்டு அவன் மெல்ல மெல்ல விலகினன்.

பெரியவன் கொழும்பிலிருந்து வந்தான். அதோ தெரிகிறது ஈழம் என்று உமர்காயத்தின் காவியம் போல் கூறினன். திருகோணமலை கடற்தளத்திற்கு எம்மை ''பாதுகாக்க செவன்ற்பிளிற்'' (Senventh Filith) இதோ பக்கத்து வீட்டு தங்கத்தின் மகள் புருசனை இழந்து அனுராதபுரத்திலிருந்து வந்தாள். அடப்பாவி நீ 'என்னடா சொல்கிருய் என நான் கேட்க, அவன் முகத்தில் சோகம். இராமகிருஷ்ணமிசன் வெள்ளவத்தை அருகில் கேட்ட வசனம் என்ருன். இவனும் என்னை விட்டு விலகினன்.

இரவு ஏறிய பின் தெரியும் துருவ நட்சத்திரம் போல தமது தோழர்களுடன் காட்சி அளிப்பார்கள். அம்மா பசிக்குது என்பார்கள். வந்தாயா மகனே என்று எழுந்து அமுதளிப்பேன். தமது வீரப் பிரதாபங்களை வான் உயரக் கூறுவார்கள். நான் அவர்களுக்குப்பால் ஊட்டினேன். அவர்கள் எனக்கு ஈழத்தாகத்தை ஊட்டினர்கள்.

ஓர் இரவு வந்து, அம்மா இரத்தத்தில் ஈழம் காண்போம் என்று கூறியவர்கள் வீரமாகாளி யம்மன் கோவிலடியில் உண்ணுவிரதம் இருந்தார்கள். அவர்களுக்கு ஊட்டினேம் சோறு என்று கூறினர்கள். சபாஷ், எடா மகனே அகிம்சைவழிப் போராட்டம் மகாத்மா காந்திக்கும் — வெள்ளையனுக்கும் தான் பொருந்தும். எமது சிங்கள அரசுக்கல்ல என வீரமூட்டினேன்.

இவ்வாறு பலபல இனியசம்பவங்கள்; எனது மனதில் இனிய கனவுகள்; நான் பெற்ற மறவர் ஈழம் பெற்றுத்தரும் காட்சிகள்; ஆகா, ஆகா ? எனது சின்னவன் வந்து, ஐயோ என் கனவுகளில் இசைத்த வீணையின் தந்தி அறுந்து விட்டது. அம்மா அண்ணன் இறந்துவிட்டான் என்ருன். திடுக்கிட்டு, பின் மனதைத் தேற்றிக் கொண்டு எந்தக் 'களத்திலடா என்று கேட்டேன்! நேரிய நெஞ்சிலா குண்டு பாய்ந்தது? இரு இயக்கங்களுக்கிடையிலான மோதலில் அண்ணவைக் கொன்று விட்டார்கள் என்று அவன் விம்மியபடி கூறினன். நெஞ்சில் வேல்பாய்ந்தது. நோக்கினேன் சின்னவனை. பொது எதிரியை எதிர்க்கப் பாவிக்கும் ஆயுதத்தை தன் சகோதரன் மேல் ஏவிவிட்டவனையும் ஈழத்தாய் தான் பெற்ருளா? இனி என்னடா ஈழம். பூட்டானில் தரும் இடைக்காலத் தீர்வைப் பெற்றுக்கொண்டு இங்கு வாடா என்றேன். அம்மா ஓரிருவர் செய்யும் செயலினுல் எங்கள் அனைவர் மேலும் களங்கம் கற்பிக்காதே. ஈழம் இல்லையேல் என்னை மீண்டும் காணுய் எனச் சபதம் கூறிச் சென்று விட்டான் என் மகன்.

இயக்க செல்வங்களே எனக்கு என் மகன் வேண்டும். நீங்கள் ஒரு சமரசத்தீர்வைப் பெறுமுன் எனது மகனை என்னிடம் ஒப்படைத்து விட்டுப் பெறுங்கள். ஏனெனில்... ''அவன் ஒரு மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்.''

—ஈழத்தாய்

## பரவலாக இடம்பெறும் கொள்ளைகள்

அன்புடையீர்!

'பொதுமை' ஆசிரியர் குழுவுக்கு எழுதும் இம் மடலின் மூலம் அண்மைக்கால நிகழ்வுகளையும், போக்குகளையும் சுட்டிக்காட்டுவது பொதுமகன் என்ற வகையில் பொருத்தமானது என எண்ணுகிறேன்.

அண்மைக் காலத்தில் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்களின் அட்டகாசங்கள் அடாவடித்தனங்கள் கட்டுமீறிப் போவதைத் தாங்களும் கண்டிருப்பீர்கள். குடா நாட்டில் பரவலாக இடம் பெறும் இத்தகைய கொள்ளைகளால் பொதுமக்கள் மத்தியில் பதட்டமும் பீதியும் நிலவுவதை மக்கள் மத்தியில் நடமாடும் எவரும் கண்டு கொள்ள முடியும். குறிப்பாகக் கடந்த 10ம் திகதி புன்னலைக் கட்டுவனில் ஒரு வீட்டில் நிகழ்த்தப்பட்ட 'சிக்காக்கோ' பாணிக் கொள்ளையை அடுத்து காரைநகர், சுழிபுரம், தாவடி, புத்தூர், ஆவரங்கால் எனப் பல இடங்களில் பெறுமதிவாய்ந்த நகைகள், ஆயிரக்கணக்கான பணம் என்பன, இவ் ஆயுதம் தாங்கிய கும்பலினுல் கொள்ளையிடப்பட்டுள்ளது. நவீன ஆயுதம் தாங்கிய இக் கொள்ளையர்கள் வயர்கள், தடிகள், பொல்லுகள், அலவாங்கு போன்ற ஆயுதங்களால் மிருகத்தனமாகப் பொதுமக்களைத் தாக்குவதையும், பாதிக்கப்பட்டவர்கள் மிக விரக்தியடைவதையும் உண்மையான விடுதலை இயக்கங்கள் அலட்சியப் படுத்திவிடமுடியாது. அதுவும் இத்தகைய மிருகத்தனமான தாக்குதலின் உச்சக்கட்டமாகப் புத்தூரில் ஒருவர் அநியாயமாய்க் கொலையுண்ட பின்னும், பார்த்திருக்கப் பொறுக்காத பொதுமக்கள் பருத்தித்துறை வீதியில் வாகன மறிப்பு போராட்டத்தை நடத்திக் கவனத்தை ஈர்க்க முனைந்ததையும் அவதானிக்க வேண்டும்.

உண்மையான பொறுப்பு மிக்க இயக்கங்கள் இத்தகைய செயல்களையிட்டு நடவடிக்கைகளில் இறங்காதிருப்பது பொதுமக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தைக் கிளறுவதாய் உள்ளது. ''வெறுமனே எமக்குச் சம்பந்தமில்லை'' என்று கூறிக் கைவிரிப்பதோ, அல்லது 'கண்டிக்கிரேம் என கண்டன அறிக்கைகள்' வெளியிடுவதோ விடுதலை இயக்கங்கள் தமக்குள்ள சமூகப் பொறுப்பை அலட்சியம் செய்கின்றன என்பதையே எடுத்துக் காட்டும். அல்லது விடுதலைத் தாபனங்களில் தான் இந்த இரவு நேரக் கொள்ளையர்கள் உள்ளனர் என எண்ண வைக்கும்.

நவீன ஆயுதம் தரித்த கொள்ளைக் கும்பல்கள் கட்டுப்பாடின்றி நாட்டில் நடமாடுவது கூட எமது விடுதலைப் போராட்டத்தைச் சிதறடிக்கச் செய்யப்படும் ஒரு சதி என்றே கருதவேண்டியுள்ளது. இந்தக் கொள்ளையர்களின் அட்டகாசம்ஆத்திரத்தைக் கிளறஅதிகம் எழுதிவிட்டேன் போலத் தோன்றினுலும், இதனைப் பிரசுரிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களைப் பொறுப்பாகச் சிந்திக்கத் தூண்டுமாறுகோரி பணிவுடன் விடை பெறுகிறேன்.

இவண்,
அப்பாவிப் பொதுமகன்.

## ஈரோஸ் பலத்த கண்டனம்

ஆரம்பம் முதலே கொள்ளைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டனம்செய்து வந்துள்ள ஈரோஸ் அமைப்பு, இத்தகு செயல்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படவில்லை என்பதைப் பொதுமக்கள் நன்கறிவர். அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் ஆயுதந்தாங்கிய குழுவினரின் அடவாடித்தனங்களை இனம்கண்டு அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பையும் கடமைப்பாட்டையும் காலத்தின் கட்டாயம் என்று ஈரோஸ் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொதுமை

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தைத் திசை திருப்பவும், மழுங்கடிக்கப்படவும் பல் வேறு முனைகளில் முயற்சி எடுக்கப்படுவதனை உணர முடிகிறது. அரசியல் ரீதியாகப் பிரயோகிக்கப்படும் நிர்ப்பந்தங்களும் இராணுவ ரீதியாகத் தாக்கப்படுவதும், அப்பாவிப் பொதுமக்களைத் துன்புறுத்தி அடிபணிய வைக்கவும் எனப் பலவாருக எம்மை நெருக்கடிக்கு உள்ளாக்கிவருகிறது -ஏகாதிபத்தியங்களும் அதன் சார்பு சக்திகளும். ஆனுலும் விடாமுயற்சியும், துணிவும், தன்னம்பிக்கையும் மிக்க எமது மக்கள், தொடர்ந்தும் சலிப்பின்றிப் போராடி ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைக் காண விழைகின்றனர். போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் அல்லது புறமுதுகிடும் செயல்களை வரலாறும் மக்களும் மன்னிக்க மாட்டார்கள் என்பதும் தெளிவு.

மக்கள் மத்தியில் காணப்படும் சமூக—கலாச்சார வேறுபாடுகளை ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் மக்களைக் கூறுபோட்டே போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என எதிரி பகற்கனவு காணுகிருன். எதிரியின் இந்தச் சதியைப் புரிந்தோ புரியாமலோ எம்மவர் சிலரும் இதற்குத் துணை போவது வேதனைக்கு உரியது மட்டுமல்ல, வெட்கப்பட வேண்டியதுமாகும். சில காலத்திற்கு முன்பாக ஈழத்தின் தென்கோடியில் அந்நியோன்யமாக வாழ்ந்து வந்த மக்களிடையே மத உணர்ச்சிகளைத் தூண்டி ஒரு கலவரம் வடிவமைக்கப் பட்டதனை அனைவரும் அறிவர். இனியும் இது போன்ற குழப்பங்களைத் தூண்டும் வித்துக்களை ஆழமாக விதைக்க எண்ணிய அரசின் சதி 'ஜிகாத்' என்ற வடிவில் வெளிப்பட்டு நிற்கிறது.

இசுலாமிய சகோதரர்களைப் பாதுகாக்கப் புனித யுத்தம் நடத்தப் போவதாகக் கூறிக்கொள்ளும் இந்த ஜிகாத்துகள், இந்து - இசுலாமிய மக்களிடையே தொடர்ந்தும் பதட்ட நிலையை உருவாக்கக் காரணமாக இருந்து வருகின்ருர்கள். '76ல் புத்தளம் பள்ளிவாசல் சூட்டுச் சம்பவத்தினை எண்ணியோ, அல்லது '78ல் வேக்கந்தைப் பள்ளிவாசல் கலவரத்தை நினைத்துப் பார்த்தோ, அல்லது காலியில் காயம்பட்டுப் போன "இசுலாமிய—பௌத்த உறவு பற்றிச் சிந்தித்தோ இந்த அரச எந்திரத்தை எதிர்க்காத-எதிர்க்க விரும்பாத இந்தச் சுயநலமிகள், காலங்காலமாய் ஒன்றுபட்டுச் செயற்பட்ட இந்துக்களிடமிருந்து இசுலாமியரைப் 'பாதுகாக்க' விழைவதுதான் விந்தையாக உள்ளது.

அண்மையில் அரபுத் தேசிய எழுச்சியின் சின்னமான பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் பரம விரோதிகளான மொசாட்டினரோடு கொஞ்சிக்குலாவும் இந்த அரசாங்கம், ஏற்படுத்திக் கொடுக்கும் பயிற்சி, கருவி வசதிகளுக்கு இரையாகிப்போய் தமிழ் பேசும் மக்களாக ஒன்றுபட்டுப் போராடுவதைத் தடுக்கும் வகையில் செயலாற்றுவது 'புனித யுத்தம்' என்ற பெயருக்கே களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயலெனவே கவலையடைய வேண்டியுள்ளது.

இருந்தும் இசுலாமிய மக்கள் இந்தச்சுயநலசக்திகளின் சதிக்குப் பலியாகிவிட மாட்டார்கள் என்பதைத் தற்போது துல்லியமாக உணரமுடிகின்றது. உதாரணமாக இசுலாமிய விழிப்பு ஒன்றியம் அண்மையில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் ஈழப் போராட்டத்துடன் இசுலாமியர் இரண்டறக் கலக்க வேண்டிய அவசியம் வற்புறுத்தப் பட்டது. தம்மைத் தாமே தலைவர்கள் எனத் தம்பட்டமடிக்கும் கொழும்பு வாழ் முஸ்லீம் முதலைகளின் முகமூடிகள் கிழித்தெறியப் பட்டன. தமிழ்பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்து போராட வேண்டிய தேவை வலியுறுத்தப் பட்டது. பாட்டாளி மக்களுக்காகப் பரிந்து பேசுவதாகக் கூறிக்கொள்வோர் கூட தம் சுய இலாபத்திற்காக இசுலாமிய இனத்தை விற்பதைக் கண்டனம் செய்தது.

தற்போதைய இனப்பிரச்சனை இசுலாமியர்களுக்கும் பொதுவானதொரு விவகாரமே என்பதைத் தெளிவு படுத்திய மேற்படிப் பிரசுரம், தமிழ்பேசும் மக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் இசுலாமியருக்கும் ஏற்புடையதே என்பதை ஐயந்திரிபின்றி எடுத்துக்கூறியது. இலங்கைத் தீவின் வடக்கும், கிழக்கும் இணைய வேண்டும் என்று வற்புறுத்திக்கூறியது. இவ்வாறெல்லாம் தெளிவான நிலைகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கை, ஈழப் போராட்டத்துடன் இசுலாமியர் சங்கமமாக வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஈழப் பிரதேசத்தில் வாழும் மக்களனைவரும் ஒட்டு மொத்தமாக ஒரே குரலில் தம் போர்க் குரலை எழுப்பினுல், ஈழத்தில் வாழுமனைவரும் ஈழவர் என்ற அடிப்படையில் போராட்டத்தில் இறங்கினுல் எமது போராட்டத்தை எவராலும் தடுத்துவிட முடியாது. அதைவிடுத்து எமக்கிடையிலான வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி எமது மக்களைக் கூறுபடுத்துவோமாயின் நாமனைவரும் தாழ்ச்சியுற வேண்டிய நிலைமைக்கே தள்ளப்படலாம்.

□

வெளியீடு:

**ஈழப்புரட்சி அமைப்பு**

[EROS]

□

25.10.85 அன்று ஈழத்தில் வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக 3.11.85 பதிப்பித்து சென்னையில் வெளியிடப்பட்டது.

□

**அன்பளிப்பு : ரூபாய் 2**

□

தொடர்பு முகவரி:

ஈழம்

த. பெ. எண்: 2356

சென்னை

600 024

□

## சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே நேரத்தில் தொடர்ந்தும் இனப் படுகொலைகள், அரசியல் கொலைகள், மனித சித்திரவதைகள், மரண தண்டனைகள் ஈழவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படுவதைக் கண்டித்துச் சர்வதேச மன்னிப்புச் சபை 1984 ஆம் ஆண்டிற்கான தனது அறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிக்கையில் 1984ல் உலகில் அரைவாசிக்கும் அதிகமான நாடுகள் சிறைக் கைதிகள் மீது அடிப்படை உரிமை மீறல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன ; 500 பேர் வரை மரண தண்டனைகள் வாயிலாகவும் ஏனைய தண்டனைகள் இரகசியமாகவே நடத்தப்பட்டும் விசேட விசாரணைகள் நடத்தப்பட்டும், பலர் விதிவிலக்கான முறைகளில் தண்டிக்கப்பட்டனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை மீறல்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

மேலும் தனது அறிக்கையில், அரசியல் பிரச்சனைகள் அல்லது சட்டம்-ஒழுங்கை மீறிய செயல்கள் எதுவாக இருப்பினும், இந் நடவடிக்கைகளைத் தண்டிக்கும் விதத்தில் கைதிகளைச் சித்திரவதைப் படுத்துவது, மரண தண்டனைக்குள்ளாக்குவது போன்ற செயல்கள் எவ்வகையிலும் நியாயப் படுத்த முடியாதவை என்றும் இந் நடவடிக்கைகளை உலக சமூகம் தொடர்ந்தும் ஒத்துக் கொள்ளாது என்றும் கண்டிப்பாகக் கூறியுள்ளது. சிறைக் கைதிகள் தொடர்ந்தும் நீண்ட காலத்திற்குச் சரியான உணவு, காற்ருேட்டம் என்பன இன்றியும் யாருடனும் பேசவோ எதனையும் வாசிக்கவோ சந்தர்ப்பம் வழங்கப்படாத காரணத்தினுலும் நோய்வாய்ப்பட்டும் உளவியல் ரீதியிலான பிரச்சனைகளை அனுபவித்தும் வருவதனை மனிதாபிமானம் கொண்ட யாரும் அனுமதிக்கமாட்டார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளது மன்னிப்புச் சபை.




## அமெரிக்க செனட்டரின் ஆலோசனை

வன்முறைகள் நீடிக்கும் வரை ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புக்கள் இல்லை. எனவே தங்கள் நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்குத் தங்கள் நாட்டிலுள்ள தமிழ் மக்களுடன் ஈடுபாடு கொள்ளும் போது கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்குமாறு தாங்கள் பணிந்துரைப்பது ஒரு சாத்தியமான அறிகுறியாக இருக்கும் என நான் கருதுகிறேன் என்று அமெரிக்க செனற் வெளியுறவுக் குழுவின் மசாசுசெட்றால் உறுப்பினர் திரு. ஜோன் எவ். கெரி ஶ்ரீ லங்கா ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்த கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். செப்டெம்பர் 20 என திகதியிடப்பட்ட இக் கடிதப் பிரதியை அவர் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## சுவிசில் இருந்து தமிழ் இளைஞர் திருப்பி அனுப்பப் படார்

சுவிசில் அரசியல் அடைக்கலம் கோரி தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் 3000 தமிழ் இளைஞர்களையும் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பி வைப்பதில்லை என்று அந்நாட்டு அரசாங்கக் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. அண்மையில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு நேரில் சென்று சேகரித்த விபரங்கள் சுவிஷ் அரசாங்கத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதாம். இவைகளை அடுத்தே அரச உயர்மட்டம் புதிய முடிவுக்கு வந்துள்ளதாகவும் லண்டனிலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.



நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்